# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

**மூன்றாம் காலாண்டு, 2019**

# “மிகவும் சிறியவராகிய இவர்கள்” எளியவருக்கு ஊழியம் செய்தல்


1 தேவன் சிருஷ்டித்தார் (ஜூன் 29–ஜூலை 5) ........ 4
2 சிறந்த உலகிற்கான செயல்திட்டம் (ஜூலை 6–12) ........ 14
3 ஓய்வுநாள்: விடுதலைநாள் (ஜூலை 13–19) ........ 24
4 சங்கீதம்-நீதிமொழிகளில் இரக்கமும் நியாயமும் (ஜூலை 20–26) ........ 34
5 தீர்க்கதரிசிகளின் அழைப்புக்குரல் (ஜூலை 27–ஆகஸ்ட் 2) ........ 44
6 சிருஷ்டிகரைத் தொழுதுகொள் (ஆகஸ்ட் 3–9) ........ 54
7 இயேசுவும் எளியவரும் (ஆகஸ்ட் 10–16) ........ 64
8 “மிகவும் சிறியவராகிய இவர்களில்” (ஆகஸ்ட் 17–23) ........ 74
9 புதிய ஏற்பாட்டுச் சபையில் ஊழியம் (ஆகஸ்ட் 24–30) ........ 84
10 சுவிசேஷத்தை வாழ்ந்துகாட்டுதல் (ஆகஸ்ட் 31–செப்டம்பர் 6) ........ 94
11 வருகை நம்பிக்கையை வாழ்ந்துகாட்டுதல் (செப்டம்பர் 7–13) ........ 104
12 இரக்கத்தைச் சிநேகித்தல் (செப்டம்பர் 14–20) ........ 114
13 பணிவிடைசெய்கிற சமுதாயம் (செப்டம்பர் 21–27) ........ 124



பாட ஆசிரியர்கள்

**ஜோனத்தான் டஃப்பி**

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

**சென்னை – 600 048**

# மிகவும் சிறியவராகிய இவர்களில் ...



‘நித்திய சுவிசேஷத்தை’ உலகம் முழுவதிற்கும் அறிவிப்பதற்காக செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் அழைக்கப்பட்டுள்ளார்கள். வெளி 14:6. மனிதர்களைச் சீடர்களாக்கி, ஞானஸ்நானம் கொடுத்து, அவர் ‘கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்’பண்ணுமாறு இயேசு சொன்னதற்குக் கீழ்ப்படியும்போது அந்த அழைப்பை நிறைவேற்றுகிறோம். மத் 28:20. துன்பத்திலும் வறுமையிலும் பசியிலும் சிறையிலும் இருப்பவர்களுக்கு ஊழியம்செய்யுமாறு அவர் கட்டளையிட்டிருக்கிறார்.

நல்ல சமாரியன் உவமையை இயேசு சொல்லிவிட்டு, “நீயும் போய் அந்தப்படியே செய்” என்று சொன்னார். லூக்கா 10:30-36, 37.

‘மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல’ (மத் 25:32) சகல ஜனங்களையும் தேவன் பிரிக்கப்போகிற காலம் வரப்போவதைப் பற்றிச் சொன்னபோது, பசியோடிருப்பவர்களுக்கும் வியாதியஸ்தருக்கும் வஸ்திரமில்லாதோருக்கும் சிறையிலிருப்போருக்கும் உதவவேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். ‘மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்’ என்றார். மத்தேயு 25:40.

அதாவது இரட்சிப்பு, பரிசுத்தஸ்தலம், மரித்தோரின் நிலை, பிரமாணத்தின் மாறாதன்மைகுறித்த மாபெரும் சத்தியங்களை அறிவிப்பது முக்கியம்தான்; அதோடுகூட பிறருடைய தேவைகளைச் சந்திக்கிற ஊழியர்களாகவும் நாம் இருக்கவேண்டும். அவர்களுக்காக ஏதாவது செய்வதுதானே அவர்களை அணுகுவதற்கான மிகச்சிறந்த வழி? ‘மக்களை அணுகுவதில் கிறிஸ்துவின்

பாணி மட்டுமே மெய்யான வெற்றியைத் தரும். மனிதர்களின் நலவிரும்பியாக அவர்களோடு இரட்சகர் சுற்றித்திரிந்தார்; அவர்கள்மேல் அனுதாபம்கொண்டார்; அவர்களுடைய தேவைகளைச் சந்தித்தார்; அவர்களுடைய நம்பிக்கையைச் சம்பாதித்தார். பிறகு, ''என்னைப் பின்பற்றுங்கள்'' என்று கட்டளை கொடுத்தார்.' - *EGW, MH, p 143.*

வறியோர், சிறுமைப்பட்டோர்மேல் தேவன் காட்டுகிற விசேஷித்த அக்கறைகுறித்து வேதாகமத்தில் 2,103 வசனங்கள் உள்ளனவாம். விசுவாசம், கோட்பாடு, கிறிஸ்தவ வாழ்க்கைகுறித்து வேதாகமத்தில் வலியுறுத்தப்படுகிற அளவுக்கு எளியவருக்கு உதவுவதுகுறித்தும் வசனங்கள் வலியுறுத்துகின்றன. வேதனை, உபத்திரவங்களைப் போக்குவதில் நாம் தீவிரம் காட்டவேண்டும். அவ்வாறு செய்வதால் சுவிசேஷத்திற்கு இடையூறு செய்கிறோமா? இல்லை. சுவிசேஷத்தை வல்லமையான விதத்தில் அறிவிக்கிறோம்.

உதவி தேவை என்பதற்காக உதவவேண்டும். 'நியாயம்செய்வது' சரியானது, நன்மையானது என்பதற்காக 'நியாயம்செய்ய'வேண்டும். மீகா 6:8. நியாயம்செய்து, பிறர் தேவைகளைச் சந்தித்து, 'உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து' அவர்களுக்குச் சொல்வது (1பேதுரு 3:15), அதாவது கிறிஸ்துவிலுள்ள நித்தியவாழ்க்கைகுறித்த வாக்குறுதியைச் சொல்வது சிறந்தது.

இயேசு வியாதிகளைக் குணமாக்கினார், குருடருக்குப் பார்வைகொடுத்தார், குஷ்டரோகிகளைச் சொஸ்தமாக்கினார், மரித்தோரை எழுப்பினார். அவர்கள் எல்லாருமே பிறகு எப்போதாவது மரிக்கவிருந்தவர்கள்தாம். எனவே, அந்த உதவிகளோடு அவர் நிறுத்தவில்லை; 'என்னைப் பின்பற்றுங்கள்' என்று அழைத்தார். நாமும்கூட பிறருக்கு உதவிசெய்து, 'அவரைப் பின்பற்றுங்கள்' என்று அழைக்கவேண்டும்.

> **'மக்களை அணுகுவதில் கிறிஸ்துவின் பாணி மட்டுமே மெய்யான வெற்றியைத் தரும். மனிதர்களின் நலவிரும்பியாக இரட்சகர் அவர்களோடு சுற்றித்திரிந்தார்.'**
> *- MH, p 143.*

உலகில் நியாயத்தையும் நன்மையையும் செய்யும்போது, தேவராஜ்யத்தை எடுத்துக்காட்டுகிறோம். அதன் உண்மைத்தன்மையையும் நிஜத்தையும் பிரதிபலிக்கிறோம்; பிரசங்கிக்கிற அளவுக்கு இது பயனுள்ளது. தரித்திரர், சிறுமைப்பட்டோர்மேல் அக்கறை காட்டும்போது, தேவனைக் கனப்படுத்துகிறோம். ஏசா 58:6- 10. ஆனால் உதவாதபட்சத்தில், அவரை நாம் திரித்துக்காட்டுகிறோம். நீதி 14:31.

எளியவருக்கு உதவுவதுபற்றி வேதாகமம் சொல்வதை இக்காலாண்டில் பார்ப்போம். 'இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க்கொடுங்கள்.' மத் 10:8.

ஜோனத்தான் டஃப்பி, 2012முதல் அட்ரா-வில் (*ADRA*) பணியாற்றி வந்திருக்கிறார். 2008இல் ஆஸ்திரேலியாவின் அட்ராவில் இணையும் முன்பு தென் பசிஃபிக் டிவிஷனில் அட்வென்ட்டிஸ்ட் ஹெல்த்தின் இயக்குனராகப் பணியாற்றினார். எனவே, சுகாதார மேம்பாட்டிலும், சமூக சுகாதார வளர்ச்சியிலும் மிகுந்த அனுபவம்பெற்றவர்.